உ
சிவமயம்





யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும்,
பின்னர் இலண்டனை வாழ்விடமாகவும் கொண்டவரும்
திரு திருமதி. ரத்தினம் அவர்களின் அன்பு மகனுமான

## அமரர் திரு. ஜவகரத்தினம் அவர்களின்

# நினைவு மலர்

## In Memory of
# Late Mr. Ratnam Jawaharatnam
## 19.01.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்னையை இழந்தே தான் ஆண்டொன்று ஆகுமுன்னே உன்னையும் இழந்தோமே அப்பா உருகுதே உள்ளம்!**

**தொகையறா**

உற்றார் உறவினர்கள் உற்றதுணையாய் உடனிருந்தும்!
சுற்றங்கள் சூழ்ந்துவந்து சோகத்தை தணித்திருந்தும்!
பெற்றெடுத்தே பற்றுவைத்த தந்தைதாய் பிரிந்தார்!
வெற்று வெறுமையாய் போனதே எங்கள் உள்ளம்!

**பாடல்**

தெய்வத்தின் நிகரான தாய்மைக்கும் ஈடான
தந்தையே இழந்தோம் உன்னை! – எம்மனதில்
உன் முகம் காண்கின்றோமே – தினமும்
உன்னையே நினைக்கின்றோமே!

அன்னையை இழந்தேதான் ஆண்டொன்று ஆகுமுன்னே
உன்னையும் இழந்தோம் நாமே - இம்மண்ணிலே
பண்ணிய பாவம் என்ன? – தந்தையே
அன்னையோ அழைத்தார் உன்னை?

அன்னையின் பிரிவெமக்கு தீராத் துயர்தரவே
அன்னைபோல் நீ உன்னையே – எமக்காய்
ஆக்கியே வாழ்ந்தாய் அப்பா! - எமக்கு
தந்தையும் தாயும் அப்பா!

ஊனுடல் உள்ளிருக்கும் நாடி நரம்பெல்லாம்
ஓடுதே உதிரந் தானே – அதுவும்
நாடுதே உன் நேசமே! – என்றும்
தேடுதே உன் பாசமே!

எண்ணிலாக் கனவுகளை எத்ததனை நினைவுகளை
உள்ளத்தில் சுமந்தீர்களே – விதியின்
வேடிக்கை விளங்காமலே – எமக்கும்
வேதனை தரும் காலமே!

கண்களின் இமைபோலே உங்களின் நிழல் தன்னில்
எங்களை வளர்த்தே வந்தீர் - உங்களை
வெந்தணல் நடுவே வைத்தோம் - அக்கணமே
உள்ளமும் வெந்தே நொந்தோம்!

உனக்கென வாழாமல் அனைத்துமே எமக்காக
உழைத்திட்டு மறைந்தாய் அப்பா! – விரும்பி
உனக்கென என்செய்வோம் நாம் - தொல்லுலகில்
உனையினிக் காண்போமோ நாம்!

பிறப்பொன்று அமைந்தாலே இறப்பது இயல்பாகும்
மறுக்கவில்லை உள்ளமே - இதுவுன்
இறக்கும் வயதில்லையே! - இதையும்
பொறுக்கும் மனம் இல்லையே!


மண்ணிலே ஜென்மங்கள் மறுபடி அமைந்தாலே
அத்தனை ஜென்மத்திலும் - விரைந்தே
ஆண்டவன் வரம் வேண்டுமே! – உங்களின்
வாரிசாய் வர வேண்டுமே!

பாசமுள்ள பிள்ளைகள் தர்ஷி, தர்ஷன் அவர்களின் சார்பில்...

**பாடல் ஆக்கம்: சின்னராசா சத்தியமூர்த்தி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு இரத்தினம் ஜவகரத்தினம் அவர்கள்



மண்ணில்
18 - 10 - 1950

விண்ணில்
16 - 12 - 2012

## திதி வெண்பா

நந்தன ஆண்டிலே மார்கழிப் பூர்வபக்கம்
வந்திட்ட திதியாம் சதுர்த்தியில் – முந்தி
அருஞ்ஜவக ரத்தினம் நற்சிவனடியில் சேர்ந்தே
பெரும்பேறு தானே பெற்றார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## திருச்சிற்றம்பலம்

### விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே

### தேவாரம்

கூற்றாயின வாறு விலக்ககி லீர்
கொடுமை பலசெய் தன நான் அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாது என் வயிற்றின் அகம் படியே
குடரோடு துடக்கி முடக்கி விட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறை அம்மானே

### திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதித்துஉன்
விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்த்துன்னைப் போற்றிசயசய
போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக்
கண்டுகொள்ளே

### திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன்வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னியதில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்கஎன்றார்

## திருப்புகழ்

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலில் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றன் உயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைத் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமானே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

## கந்தர் அலங்காரம்

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோள்என் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசர்இரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமும்
தோளும் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் நினைவில் நிற்கும் Jawa அண்ணன்
## அண்ணனின் வரலாறும் எமது நட்பும்

1950ம் ஆண்டு ஐப்பசி மாதம் 18ம் திகதி யாழ்ப்பாணத்தில், Ratnam Street , K.K.S Road, வண்ணார்பண்ணை என்னுமிடத்தில், இரத்தினம், பரமரத்தினம் தம்பதிகளின் நான்காவது பிள்ளையாக Jawaharatnam அவர்கள் பிறந்தார். இவருடைய அண்ணன்களாக Dr.Jayaratnam, Vijayaratnam, அக்கா Ratneswary, தம்பி Gopalaratnam, தங்கைகளாக Rathinambikai, Rathinavathy ஆகியோரைக் கொண்டிருந்தார்.

Jawa தனது ஆரம்பக் கல்வி, இளமைக்கல்வியை வட்டுக்கோட்டை Jaffna college இலும், பின்னர் பாடசாலைக் காலங்களில் கல்வியில் சிறந்த மாணவனாகவும், விளையாட்டுத் துறையில் (Cricket, Athletics) சிறந்த வீரனாகவும் திகழ்ந்தார். 12.09.1980 ஆம் நாள் மாணிக்கம், மாரிமுத்து தம்பதிகளின் மகளான சாரதாதேவியை திருமணம் முடித்து, Cey - Nor, காரைநகர், Colombo ஆகிய இடங்களில் கணக்காளராகத் தொழில் புரிந்து கொண்டிருந்தார்.

நாட்டின் சூழ்நிலை காரணமாக 1983ம் ஆண்டு London வருகை தந்து, பின் தன் மனைவி சாரதாதேவியையும், London ற்கு அழைத்து, பின்பு Dharshi, Dharshan எனும் இரட்டைக் குழந்தைகளையும் பெற்றெடுத்தார். பிள்ளைகள் தமது ஆரம்பக் கல்வியை Redbridge Junior School இலும் இளமைக்கல்வியை Beal High school இலும் கற்று, கல்வித்துறையில் திறம்பட சித்தியடைந்து பாடசாலையில் பல சாதனைகள் புரிந்தனர். 8 வருடங்கள் என்னுடைய மனம் கவர்ந்த மாணவர்களுமாவார்கள். பிள்ளைகள் இருவரும் பெற்றோருக்கு மட்டுமல்லாது கற்பித்த ஆசிரியர்களுக்கும், பாடசாலைக்கும் பெருமை சேர்த்தனர். பிள்ளைகள் தற்போது பல் வைத்திய கலாநிதிகளாக (Dentist) சேவையாற்றிக் கொண்டு இருக்கிறார்கள்.

Jawa, London ல் Pinnacle Restaurant Group, Prince Regents Hotel, Marutiz fashions இறுதியாக Ward Devicha Chartered & Accountancy firm ல் கணக்காளராகக் (Accountant) கடமையாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எமது நட்பும் எங்கள் நினைவும்.**

எமது நட்பு Jawa ன் குடும்பத்துடன் கிட்டத்தட்ட 25 வருடங்களாகும். நல்ல நண்பன் என்று சொல்வதா, அல்லது பாசமிக்க சகோதரன் என்று சொல்வதா, இரண்டுமே அவருக்குப் பொருந்தும். நல்ல திடமான ஆலோசனைகளைப் பகிர்ந்து நல்ல முடிவுகளை எடுக்கும் ஆற்றல் பெற்றவர். நேர்மையை நேசிக்கும் உத்தமன். உறவினர் நண்பர்களை நன்கு மதிக்கும் கலாசாரம் தெரிந்த நண்பன். நல்ல உள்ளங்களைக் கவர்ந்த இதயக்கோயில். துக்கங்கள் மனதில் இருந்தாலும், புன்னகையுடன் வரவேற்கும் பண்பாட்டில் ஒரு மன்னன். தொலைபேசியில் ''தங்கா busy ஆ, நீர் free இருந்தால் வரலாம் என்று யோசிக்கிறன்'' என்று மிகவும் பண்பான முறையில் மற்றவர்களை நேசிக்கும் நாகரிகம் தெரிந்த மனிதன்.

பல அரங்கேற்றங்கள், பல மேடை நிகழ்ச்சிகளை திரைமறைவில் இருந்து சரியான நேரத்திற்குத் தொடங்கி குறித்த நேரத்திற்கு முடிக்கும் ஆற்றல் படைத்தவர்.

உங்கள் நட்புக்கு விலைமதிப்பே இல்லை. உங்கள் நினைவு என்றும் எங்கள் மனதை விட்டு அகலாது. உங்கள் நகைச்சுவைத்தென்றலை மறக்கவே முடியாது ஜவா.

என்றும் உங்கள் நினைவோடு வாழும்

**Sinnaih Thangavel & Family**
**(Thanga Master)**
**United Kingdom**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இத்தரை மீதிலே வாழ்வாங்கு வாழ்ந்த...
## நித்திலமே! ரத்தினமே!! ஜவகரத்தினமே!!!

கல்வியில் மேலோங்கி பல்திறமை தான்வளர்த்து
வல்லமை பெற்றே ஆளுமையும் கொண்டவராய்
உண்மையொடு நேர்மை ஒழுக்கமும் நிறைந்தே
பண்பட்ட மனிதராய்ப் பரிணமித்தார் மாநிலத்தில்
சொற்திறன் செயல்திறன் தெளிந்த சிந்தனையும்
மற்றோர் கருத்தினையும் மதிக்கும் மனப்பாங்கும்
இங்கிதம் தெரிந்தவராய் நண்பர்களைக் கவர்ந்தார்
இங்கிவரை தெரிந்தவர்கள் இத்தனையும் அறிவார்
புன்சிரிப்பை உதிர்ந்தவராய் பழக நல்லினியவராய்
இன்முகத்தோடு நல் நகைச்சுவைத் துணுக்குகளை
அள்ளி வழங்கியே அனைவரையும் மகிழ்விப்பார்
உள்ளத்தில் கள்ளமிலா உத்தமராய்த் திகழ்ந்திட்டார்
நற்சாரதா அன்னையினை காந்தர்வ மணமுடித்தே
பெற்றெடுத்த பிள்ளைகளே தர்ஷனுடன் தர்ஷியுமே
இல்லற வாழ்வுதனை நல்லறமாய்ப் போற்றியிவர்
இல்லத்திலே மெச்சும் கணவராய் விளங்கியிவர்
பிள்ளைகள் இருவருக்கும் பாசமுள்ள தந்தையாகி
கிள்ளையிவள் தர்ஷிக்கும், செல்வன் தர்ஷனுக்கும்
நல்லவழி காட்டியும் பல்வைத்தியர்கள் ஆக்கியும்
எல்லோரும் போற்றும் வண்ணம் உயரவைத்தார்
சொல்லோடு செயலும் இணைந்தால் சோகமில்லை
அல்லும் பகலும் உழைத்துவிட்டால் அவதியில்லை
இந்தவழியில் வாழ்ந்தவர்தான் திரு ஜவகரத்தினம்
எந்தவினை வந்துனக்கு உன்விதியை முடித்ததுவோ
தன்துணைவி தன்னை இழந்தவிட்ட இந்நிலையில்
தன்னையே முற்றிலும் பிள்ளைகட்கு அர்ப்பணித்து
தன்விருப்பு வெறுப்பின்றி வாழ்ந்திருந்த இத்தருணம்
மின்னலைப்போல் மேனியெங்கும் ஏற்பட்ட மாற்றம்
உள்ளபடி இவரிதயம் இயங்கவேன் மறுத்ததுவோ
கள்ளமிலா இதயத்தின் துடிப்புத்தான் அடங்கியதோ
நல்லவனே வல்லவனே எல்லோர்க்கும் பிடித்தவனே
சொல்லாமல் மறைந்தாயே உன்னிழப்பே பேரிழப்பு
உற்றார்கள் உறவினர்கள் உள்ளங்களும் வாடிநிற்க
வற்றாத அன்போடு உனைநினைந்ததே கலங்கிநிற்க
நண்பர்களும் அன்பர்களும் அனைத்து உள்ளங்களும்
உண்மையில் வைத்திருந்த பாசத்தின் வெளிப்பாடாய்
கண்கலங்கி நிற்கின்றோம் எவ்வுலகில் காண்போமினி
அண்ணலின் ஆன்மா சாந்திபெறப் பிரார்த்திப்போம்!

அனைத்து அன்பு நண்பர்கள் சார்பிலும்
கவிதை ஆக்கம் சின்னராசா சத்தியமூர்த்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணர்வோடு உயிர் சேர்ந்து துடிக்கும் நொந்து! அதுதானே உறவென்று உணர்ந்தேன் இன்று!!!

தொகையறா
படைப்பதும் எடுப்பதும் இயற்கையின் இயல்பே!
இழப்பதும் துடிப்பதும் இந்த மாந்தரின் இயல்பே!

பாடல்
உன்னை ஏன்தானோ அழைத்தாரோ என் சோதரா!
என்னை ஏன்தானோ பிரிந்தாய் கண்மணி நீயடா!
என் உயிர்நாடி நரம்பெல்லாம் நிறைந்தாயடா! - என்
உயிர் நண்பன் போல் நீயும் திகழ்ந்தாயடா! -

என்னை ஏன்தானோ பிரிந்தாயோ என் சோதரா!

எந்தன் உணர்வெல்லாம் உணர்வாயே உயிராகியே!
உற்ற துணையாக வருவாயே தாய் ஆகியே!
ஒரு துன்பம் எனை நோக்கி வந்தாலுமே - நீ
ஓடோடி வருவாய் என் இல்லம் நோக்கியே!

உன்னை ஏன்தானோ அழைத்தாரோ என் சோதரா!

ஒரு வார்த்தை நான் சொன்னால் அது போதுமே - அதை
நிறை வேற்றித் தருவாயே உறங்காமலே!
மறு வார்த்தை பேசாத அருஞ் சோதரா! - எந்தன்
உடன் வந்து பிறந்தாயே பெரும் பேறடா!

என்னை ஏன்தானோ பிரிந்தாயோ என் சோதரா!

மறுஜென்மம் எனக்கொன்று இருந்தாலுமே - என்னை
மறக்காமல் வரவேண்டும் இது போலவே - இன்று
பொறுக்காமல் மனம் இங்கு அழும் போதிலே - என்
உதிரத்தின் துளி கூட உனைத் தேடுதே!

உன்னை ஏன்தானோ அழைத்தாரோ என் சோதரா!

புரியாத புதிர்தானே புவி வாழ்க்கையே!
எதிர்பார்க்க முடியாத தடுமாற்றமே!
பரிவேதும் இல்லாமல் பறித்தார் உன்னை - உந்தன்
பிரிவாலே தவிப்பேனே தினமும் நானே!

என்னை ஏன்தானோ பிரிந்தாயோ என் சோதரா!

உறவென்று அமைந்தாலே உறவாகுமா!
உடன் வந்த பிறப்பெல்லாம் உறவாடுமா!
உணர்வோடு உயிர் சேர்ந்து துடிக்கும் நொந்து!
அதுதானே உறவென்று உணர்ந்தேன் இன்று!

உன்னை ஏன்தானோ அழைத்தாரோ என் சோதரா!

உடன் பிறந்த அண்ணா Dr.ஜெயரத்தினம் அவர்கள் சார்பில்...
பாடல் ஆக்கம்: சின்னராசா சத்தியமூர்த்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## My Loving Brother, Jawa

My brother Jawaharatnam was the third son of the late Mr. and Mrs. Ratnam and was born on 18th October 1950. Even though he suffered from frequent illnesses in his early childhood, he grew stronger in his teens and in fact became a well known sportsman and was a member of the Jaffna College cricket team. An interesting part of his early life was that I, as the elder brother, had to chase him around our compound in Vaddukoddai and catch him and hand over him to my mother and grandmother to bathe him as he totally loathed bathing! He studied Accountancy to pursue his career and during this period he met and fell deeply in love with his late wife Saratha and married her in September 1980. Both of them worked in Cey-Nor in Jaffna and later in the head office, Cey-Nor Colombo. Having suffered a lot of hardships during the disturbances in Sri Lanka in 1983 both of them left Sri Lanka and came to London. He continued to study Accountancy and worked as a Chartered Accountant in different firms over the next 25 years or so. Dharshi and Dharshan were born in December 1988 and their parents rejoiced over this and looked after them with great affection and care.

Dharshi and Dharshan not only excelled in their studies but also excelled in various cultural activities including music and dance. Both the twins decided to follow a career in Dentistry and completed their course very satisfactorily in spite of their mother Saratha becoming very ill and finally succumbing to the illness in Dec 2011. Jawa and the children were very much affected by the loss of Saratha, but he managed to cope with this terrible loss with help and support from his friends and family. He always put the welfare of his children first and foremost and did his very best for them. He travelled frequently to Wales to spend time with his children and they too visited him in London regularly.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Over the last few months of his life he became very close to me and my wife Yoga, and in fact we met very frequently. He was very helpful to me teaching me a lot of IT skills and came to our house after work, spending a few hours helping me before sitting and having a cup of coffee and then returning to his home. He always brought food items that he knew we liked. He drove us to shopping centres in the recent months helping us buy various items before Christmas and said he would repeat this in the New Year. We visited him and his children on Saturday, the day before he died, and we did not have the slightest idea that he was going to leave all of us prematurely. It was a great shock for us to rush to the hospital after Dharshi phoned us from Wales on Sunday to be told by the doctor that Jawa had died from a severe heart attack.

In life, he was a very friendly, affectionate and helpful person. He was always soft spoken and I had never seen him lose his temper even in the worst circumstances.

We and our family have suffered an irreplaceable loss from which we doubt we will ever recover.

**Fondly remembered by his brother Jayam,**
**Sister-in-law Yoga,**
**Kumar and Mohan & family (UK)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Eulogy Our Dad

*(Delivered at the Funeral Service on 27th December 2012 by Dharshan & Dharshi, children of Mr Ratnam Jawaharatnam)*

Our dad was our role model and inspiration, and we'll miss him more than words can express. He was always there for us, guiding and supporting us through every step of our lives. It has been several days since our dad passed, but we are still struggling to imagine our lives without him.

Dad was a devoted father whose life was based around his family. As kids, he was keen to have an active role in our upbringing. Even as adults, he would be talking about us with his friends, speaking to us regularly while we were away, and would insist on picking us up from the bus station whenever we came home. We are fortunate to have had him as our father.

Being a very jovial person, he was loved by many, as evident by the number of people present today. Everyone remembers him by his infectious smile, which could light up the room. He was humble and soft-spoken, and we cannot recall the last time he lost his temper or raised his voice. He had many friends and did his best to stay in contact with everyone, and we have enjoyed hearing others reminisce about him during his younger years.

Dad was hard working and dedicated towards whatever he did. As a tutor, he was loved by all the children for his sense of humour and pleasant nature. He was always willing to help others, and demanded little from those around him. Many people have recalled how he helped them when no-one else could or would. We learnt a lot from the way he interacted with people, and witnessed the respect and admiration they had towards him.

For thirty years our dad was a loving husband. No-one else could have loved and cared for our mum as much as our dad. Following the loss of our mum last December, the past year has been very difficult for us. As a family, we tried our best to move on from such a tragedy, and in a way, we felt closer than before. Yet, it seems mum



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

and dad were never destined to be separated. After first meeting almost forty years ago, they are now reunited after less than a year apart.

We thank everyone who is here today to pay tribute to our dad, and truly appreciate the great distances that many of you have travelled to be with us. We thank our friends and relatives who have helped us over the past few days for their comforting words and for the effort put into organising the funeral.

Dad always had a positive attitude towards life and bought joy to the people around him. He now rests peacefully, leaving this world a better place for having been in it. His memory will live on in all of us forever.

---

## Ratnam Jawaharatnam....

Today is yet another day in my life when I remember my brother, Jawa (Mani), Saratha acca, Dharshan and Dharshi. Jawa was my elder brother, but we were more like friends. We would always be cracking jokes whenever we met or spoke over the phone. His ability to make others laugh was one of his greatest qualities.

As a child, I was very naughty but he was the one who got the blame from my father. I never got beaten with the cane because I was very lean, so he would get my share. Also, I remember the time he acted as a messenger to inform my parents about the love between my wife and I. Later, he also fell in love and got married to Saratha acca. Words cannot describe how much we will miss them both.

The only words I can say to my brother's twins are, "Life must go on". Be strong and positive and support each other.

**Gopal**
**(Brother) – UK**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Loving Uncle

The first time that I can remember meeting Mani uncle was in Sri Lanka, at the Ceynor Factory in Karainagar, Jaffna. He showed us around and then gave Kumar and me small blue and orange nets to try and catch crabs. He showed us how to do this but we could not catch a single one. When we next met, it was when he moved to the UK in 1983. He and aunty stayed with us in our house before moving out. Over the next few years we got to know them and later their expanding family. Mani uncle absolutely adored his twin children and spent a lot of time looking after and doing as much as he could for his family. When I got married to my wife Paula in 2005, he was a huge help, organizing much of our wedding, with his close friends always there to assist him.

Over the last few years he did more and more to look after aunty as her medical condition worsened and she became very dependent on him. We never heard him complain – there was nothing that he wouldn't do for her. He drove regularly with her to Wales to spend time with their children, Dharshi and Dharshan. After aunty died, he was never quite the same but tried to stay strong for the twins. Over the last few months of his life he renewed his relationship with our father, spending more and more time together. This is a time that I know dad will never forget and we will never forget Mani Uncle.

**Loving Nephew,**
**Jayamohan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## ஆறாத்துயரில் எமை ஆழ்த்தி விட்டு நீறாகிப் போன நண்பன் நினைவில்...

யாழ்ப்பாணக் கல்லூரியில் படித்தவர்கள் என்ற அடையாளத்துடன் பல நூற்றுக்கணக்கானவர்களின் நல்லுறவுக்குரியவன் என்றாலும், நட்புறவு என்ற நிலையான வானத்தில் நட்சத்திரங்களாக ஒளிப்பவர்களில் ஒருவனாகிய என்னரும் நண்பன் ஜவாவின் திடீர் மறைவுச்செய்தி இடிபோல் தாக்கியது. என்னுள்ளம் ஆற்றொணாத் துயரால் துவண்டது. 40 வருடங்களுக்கும் மேலான தூய ·நட்பின் வெளிப்பாடு வார்த்தைகளுக்குள் அடக்க முடியாதது.

10.12.2012 முன்னிரவுப் பொழுது ஜவா என்னுடன் நீண்ட நேரம் கதைத்த பொழுது இது தான் நண்பனுடனான உரையாடலின் கடைசி நாள் என நான் நினைக்கவில்லை. நிச்சயமாக ஜவாவும் நினைத்திருக்கமாட்டார். இனிமேல் வரக்கூடிய ஒவ்வொரு December 10 ஆவது நாளும் ஜவாவின் நினைவுகள் தலைதூக்கும் நாளாக அமையும் என்பது நிச்சயம்.

லண்டன் வாழ்வில் எனக்கும் ஜவாவிற்கும் இடையிலான சந்திப்புக்கள் அதிகமாக இல்லாத நிலையிலும், கல்லூரிக்காலத்துக்கே உரியதான கள்ளங்கபடமற்ற நட்பு கடைசிக் கணங்கள் வரை தொடர்ந்தது. நட்புணர்வு பிள்ளைகள் தர்ஷன், தர்ஷி உருவில் தொடரும். ஒரு வருட இடைவெளியில் தாயையும் தந்தையும் இழந்துள்ள பிள்ளைகள் மீதான அன்பும், அக்கறையும் நண்பனின் நினைவுடன் தொடரும்.

**நண்பன்**
**இ. முருகானந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Mani Mama

When we lose someone as precious and important as Mani Mama we are left with a feeling of sorrow that cannot be conveyed with words. Throughout my life I have assembled many memories and dreams of him but now they demonstrate his significance on my life. All the way through my life you taught me the right and wrong of life and consequently made me the person I am today. I will miss you so much and as a result the pain will never ease. I pray that you are happy and that you will rest in peace Mani Mama. Thank You for everything you have done.

**Sakusan (Nephew) - UK**

---

## Mani Mama we will miss you.........

Our dearest uncle was a helpful and kind person. He always told me jokes and we would all laugh at them. Every time I went to his house he always gave me chocolates and biscuits. Every Sunday I went to his house for English tuition. At the end of the last English lesson he gave me a chocolate as a Christmas present. He said to come back on the 6th January 2013 and now we are here but sadly he is not here.

**Vithuya** (Niece) - UK



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அண்ணன் என் நண்பன்

அன்பின் ஜவா அண்ணாவே (மணி)

என் உடன் பிறந்த அண்ணா உங்களுக்கும் எனக்கும் வயது வித்தியாசம் அதிகமாக இருந்தபோதும் நான் உங்களை, நீ, வா எனக் கதைக்கும் போதும நீங்கள் கோபப்படாமல் ''ஓம் அக்கா'' என்று கூறி கேலி பண்ணி சிரிப்பாயே. இனி நான் யாருடன் இப்படிக் கதைத்து சண்டை பிடிப்பேன்? நீங்கள் எனது குடும்பத்துக்குத் தந்த உந்துதலால் தானே நாங்கள் துணிவுடன் ஜேர்மனியில் இருந்து லண்டனுக்கு வந்தோம். குடும்ப முன்னேற்றத்துக்கும், எமது பிள்ளைகளின் படிப்புக்கும் இதுவரை உறுதுணையாக நின்றுவிட்டு இப்போது இடைநடுவில் தத்தளிக்க விட்டுவிட்டீர்களே. நீங்கள் இந்த உலகத்தில் இனி இல்லை என்பதை என்னால் இன்னும் நம்பமுடியவில்லை.

**ரத்தி**
**(தங்கை)**

---

## நெஞ்சில் நிறைந்த நண்பன் ஜவா

நான் முதல்முதலாக ஜவாவை 1984ஆம் ஆண்டு London School of Accountancy ல் கணக்காளர் படிப்பை மேற்கொள்ளும் போது சந்திக்க நேர்ந்தது. அவரின் மென்மையான சுபாவமும், அவரின் துணுக்கான நகைச்சுவைக் கதைகளும் என்னை நன்கு கவர்ந்தன. நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக எனது நட்பு விருத்தியடைந்து குடும்ப நண்பன் என்ற உறவைத் தந்து, புதியதோர் அத்தியாயத்தைக் கொடுத்து எமது நட்பை விரிவு படுத்தியது. பரீட்சைக் காலங்களில் ஜவாவின் வீட்டில் கூட்டுப் படிப்பு (Combined studies) செய்வோம்.

விருந்தோம்பல் என்பது அவரின் குருதியில் கலந்ததொன்று. எமது Combined studies ன் போது சில நேரங்களில் இரவுப் போசனத்தையும் தந்து என்னை வழியனுப்பி வைப்பார். இந்த விடயங்கள் என் மனதில் ஆழமாக பதிந்த நினைவேடுகள். அவரின் செயற்பாடுகள் என் மனதின் பசுமையான நினைவுகள். மனித நேயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட நண்பன். ஜவா London ல் பகுதிநேர கணக்காளராக வேலை செய்யும் போது, எனக்கும் பகுதிநேர வேலை வாங்கித் தந்த உத்தம நண்பன்.

உதவி என்பது ஜவாவின் நாடித்துடிப்பு. எந்தவிதமான உதவி கேட்டாலும் "உது எல்லாம் வெல்லலாம் I say" என்று தனக்கே உரித்தான புன்சிரிப்புடன் கூறி, தனது நேரத்தையும் பார்க்காமல் முழுமனத்துடனும், அதிக அக்கறையுடனும், 100% சரியாகச் செய்யவேண்டும் என்ற உணர்வும், உறுதியோடும் செய்து முடிப்பார்.

என் மனைவி காவேரியிடம் "உங்கள் வீட்டிற்கு வரப்பயமாயிருக்கிறது" என்றும் வந்தால் உணவை கட்டாயப்படுத்தி கொடுத்து விடுவாரென்றும் கூறுவார். ஜவா ஒரு சிறந்த நண்பன் மட்டுமல்ல, அவரை ஒரு சிறந்த கணவராகவும், பிள்ளைகளுக்கு அன்பான தகப்பனாகவும், அவர்களை நல்வழியில் வளர்த்ததையும் பார்த்து மனம் பூரிப்படைகிறேன், பெருமையடைகிறேன்.

எனது வாழ்க்கையில் நீண்ட நேரம் அடிக்கடி தொலைபேசியில் உரையாடும் ஓரேயொரு நண்பன் ஜவாதான். ஜவாவின் இழப்பு எங்கள் மனதில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அவரின் நினைவும், அத்துடன் அவரின் தனித்துவமான சிரிப்பும் என்றென்றும் எங்களுடன் இருக்கும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

**Selliah Visvanathan & Family**
**United Kingdom**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நட்பின் இலக்கணமே! ஜவா அண்ணாவே!**

இருபத்து நான்கு வருடங்கள் எம்முடன் இடையறா
நட்பில் இருந்துவிட்டு - இடையில் எம்மை தவிக்கவிட்டு
ஏன் சென்றீர்கள் ஜவா அண்ணாவே!

எமக்கு நண்பராகி அண்ணனாகி – எம்
பிள்ளைகளுக்கு அன்பு ''அங்கிள்''ஆகி,
நல்ல ஆசானாகி நல்வழிப்படுத்தினீர்களே!
எம் இல்ல நிகழ்வுகள் யாவற்றிலும் நடுநாயகமாக
இருந்தீர்களே! சிறப்படையச் செய்தீர்களே!
இனி நாம் என்ன செய்வோம் ஜவா அண்ணாவே!

அதிகம் பேசாத எங்களுக்கு அன்பாக அறிவுரை தந்து
ஆறுதல் அளித்தவர் நீங்கள்!
உதவியென்னும் போது ஓடிவந்து கரம் கொடுத்தவர் நீங்கள்!
எம் வாழ்வில் நாம் அதிகம் உச்சரித்த வார்த்தை
உங்கள் பெயராகத்தான் இருக்கும்!
இனி நாம் எவரை அழைப்போம் ஜவா அண்ணாவே!

சாரதா அக்கா, பிள்ளைகளுடன் நீங்கள் உலாவந்த காட்சிகள்
எம் கண்முன்னே நிற்கின்றதே!
நாம் உங்களுடன் சுற்றுலாவிய அந்த இனிய நாட்களும்
எம் கண்முன்னே நிற்கின்றதே!
உங்கள் புன்னகை ததும்பிய முகமும், பரிவும், பாசமும் கூட
எம் கண்முன்னே நிற்கின்றதே!
இனி இவற்றை நாம் என்று காண்போம் ஜவா அண்ணாவே!

வானுலகில் சாரதா அக்காவுடன் நீங்கள் இருந்து,
உங்கள் பிள்ளைச் செல்வங்களை ஆசீர்வதிக்கும் போது,
நாமும் அவர்கள் கூட என்றும் இருப்போம் என்பது உறுதி
ஜவா அண்ணாவே!

**வேதா, கோமளா**
**நண்பர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Ratnam Jawaharatnam

Anushiya Vijayakumar, one of our friends from Cey-Nor phoned me from London and said that she had some sad news. I knew it was going to be bad but never for a moment thought it would be about the passing away of Jawaharatnam. It was such unexpected news and one that saddened us and many of Jawa's friends down under.

When Saratha passed away, Jawa and I had many conversations, and I gently suggested to Jawa that since Saratha was no more Jawa had to be strong and take full responsibility to see the children's well being. Jawa readily agreed with me. Now to know that Jawa is also no more is really heart-breaking.

I met Jawa in 1976 when he applied for a position in the Finance Division of Cey-Nor, Karainagar. He was a very soft spoken person but came across as a confident and capable young man. He was also a cricketer and had a bundle of athletic certificates that easily helped him to secure the position he applied for.

It was a good decision to hire him and one that was also good for Jawa as he never looked back. He became one of the works accountants within two years and stayed with Cey-Nor until he left for the UK after the communal violence that engulfed Sri Lanka in August 1983.

It didn't take long for us to recognise his many good qualities and the sincere and friendly disposition of both Saratha and Jawa made them my life-long friends. We continued to be in touch over the years although we were living thousands of miles apart, even before the advent of technologies such as Internet and Skype etc. I was very fortunate to meet them again in 1995 and stayed with them. Saratha and Jawa promised to visit Australia once the children are settled and we were looking forward to the visit. Unfortunately it will never be.

The most notable qualities of Jawa were his sincerity and his ability to create a lasting impression of friendship and closeness. He was a person who could be trusted and his friendship was one to be cherished forever.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Words cannot express our sadness, especially of losing both of them within a year. We can only pray to God to give Dharshi and Dharshan the courage and strength to bear this loss. Saratha and Jawa have brought up two wonderful children and they will fulfil all the dreams of their parents. It is great consolation that Saratha and Jawa have many friends and relatives in London who will help and look after Dharshi and Dharshan.

So with a heavy heart we have to accept that Jawa is no more with us. We will meet both of them once again in a better place.

**Muthuswamy Satasivam (Australia)**
**Jawaharatnam a devoted father – devoted husband and loyal friend**

---

## A Friendly Boss

The late Mr Jawaharatnam was our first superior in our accounting career. He was not only our superior, but also our first friend and adviser. During our career in Cey-Nor, he had given us his whole-hearted support, and guided us and helped us to develop our skills and achieve promotions.

The late Mr & Mrs Jawaharatnam were very friendly with all the staff and helped everybody. Even after their migration to the UK they had been in constant touch with us. When they visited Sri Lanka along with the children they never failed to visit us and we spent some enjoyable days together.

Jawaharatnam's pleasing personality along with his positive attitude immensely helped all his colleagues, subordinates and even his superiors to perform their duties to full satisfaction.

As an immaculate person, he was admired by all and we have no words to describe his character other than to say that he was "A THOROUGH GENTLEMAN".

May His Soul Attain MOKSHA

**Kathirgamanathan & Balasundaram** (Sri Lanka)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்புள்ள அத்தானுக்கு......**

அன்புள்ள அத்தானுக்கு அன்புடன் ராஜன்
எழுதிக் கொள்வது,
நீங்கள் என் அக்காவை சந்தித்தது முதல்
இன்றுவரை நீங்கள் என்மேல் வைத்திருக்கும்
அன்பு கலந்த நட்புடன் கூடிய உறவுக்கு
நன்றி.
உங்களுடைய ஆளுமை, பொறுமை. நிதானம்
எதையும் செய்து முடிக்கக் கூடிய திறமை
என்னை மிகவும் கவர்ந்தவை.
நீங்கள் என் அக்கா மேல் கொண்டுள்ள
அன்பு, பாசம், காதல், குழந்தைகள் தர்ஷி, தர்ஷன் மேல் வைத்திருக்கும்
அளவு கடந்த பாசத்தைக் கண்டு பெருமிதம்
அடைகின்றேன்.
நீங்கள் உறவினருக்கும், நட்பிற்கும் கொடுத்திருக்கும்
முக்கியத்துவத்தை எவராலும்
மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.
நீங்கள் எமை விட்டுப் பிரிந்து நெடுந்துாரந்தான் சென்றாலும்
உங்களையும், அக்காவையும், என்றென்றும்
என் இதயத்தில் வைத்திருக்கும் அதேவேளை
உங்கள் குழந்தைகளையும் எந்தன்
குழந்தைகளாக நினைக்கும்

**உங்கள்**
**ராஜமாணிக்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்வாகத் திறன்கொண்ட ஜவா அண்ணா...

அமரர் திரு ஜவகரட்ணம் அவர்களின் திடீர் மறைவு எம் அனைவரது மனங்களையும் மிகவும் வேதனையடையச் செய்திருக்கின்றது. இவர் எனது உடன் பிறவா சகோதரி மறைந்த அமரர் திருமதி சாரதாதேவி அவர்களின் கணவர்.

அமரர் ஜவகரட்ணம் அவர்கள் எனது மாணவிகளின் நடன அரங்கேற்றங்களாயினும் சரி. நவராத்திரி விழாவாக இருந்தாலும் சரி கலை விழாக்களாக இருந்தாலும் சரி, மேடை நிர்வாகப் பொறுப்புகளை ஏற்று திறம்பட வழிநடாத்திய பெருந்தகை. நான் வருடாவருடம் நடாத்தும் நடனப்போட்டி, வருடாந்தப் பரீட்சைகளில் கேட்கப்படும் கேள்விகளை அழகாகத் தொகுத்து அப்பரீட்சைகள் திறம்பட நடக்க உதவியவர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க லண்டன் கிளையினர் ஏற்பாடு செய்திருந்த கலைவிழாவில் புதிய கலை ஆக்கமாக எல்லோரும் அதிசயப்படக்கூடிய வகையில் எனது மாணவிகளுக்கு வண்ணத்துப்பூச்சி, பலவிதமான பூக்கள் போன்றவற்றை துணியில் அலங்காரம் செய்து புதிய அத்தியாயத்தை தோற்றுவித்தவர்கள் அமரர்கள் திரு திருமதி ஜவகரட்ணம் அவர்கள்.

இவர் பரதநாட்டியத்தின் மீது கொண்ட அளவற்ற பற்று காரணமாக தனது மகள் தர்ஷியை என்னிடம் நாட்டியம் பயில அனுப்பியவர். மகளும் தந்தையின் விருப்பப்படியே பரதக் கலையை முறையாக பயின்று நற்பெயரும் பெற்றவர்.

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் எமது அயலவரான அமரர் திரு ஜவகரட்ணம் அவர்கள் சமூகப்பணி, சமயப் பணி, குடும்பப் பணியையும் தோள் மேல் சுமந்து தனது பிள்ளைகளின் வளமான வாழ்விற்கு வித்திட்ட ஒரு தந்தை. அதன் பிரதிபலிப்பே இன்று அவரது பிள்கைள் இருவரும் பிரசித்தி பெற்ற பல் வைத்திய நிபுணர்களாக பணியாற்றுகின்றார்கள்.

"ஒரு பொல்லாப்பும் இல்லை – எப்பவோ முடிந்த காரியம்" என்ற யோகர் சுவாமிகள் வார்த்தைகளுக்கு ஏற்ப வாழ்நாள் முழுவதும் ஒரு பொல்லாப்பும் இல்லாமல் வாழ்ந்த அமரர் திரு ஜவகரட்ணம் அவர்களின் பிள்ளைகளுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து அன்னாரது ஆத்மா தில்லைக் கூத்தனின் திருவடிகளைப் பற்றிக் கொள்ள வேண்டுகிறேன்.

**திருமதி சாந்தா அன்னபூரணி**
**நடன ஆசிரியை - ஸ்ரீ மீனாட்சி பரத நாட்டியப் பள்ளி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A Great Man. A Great Loss.

I had known Jawa anna's family for the past 20 years and during this time, as a close family friend, he helped me in numerous ways. Since the day I met him, he treated me like his own brother than a friend. We have had many get-togethers and family holidays together.

His soft-spoken manner, positive attitude and willingness to help others attracted many genuine friends. His English knowledge, management and organisational skills, perfection, punctuality and talent sparkled in every aspect of his daily life and amazed the people around him.

We all know how dedicated his life was towards his affectionate family. He gained many genuine friends who stood beside him throughout his life and will be supportive to his family forever. He has left us with many memories, but without him there is a gap in our lives.

**Pushparatnam** (UK)

---

## Jawaharatnam – a devoted father, a devoted husband, and a loyal friend.

When we remember Jawa the first thing that comes to mind is his smile.

Having been a friend of the family for over 30 years, he and his late wife Saratha were always there for us in our time of need. In all our time of knowing them, we would never see one without the other - from Miruthangam classes on Sundays to shopping trips in East Ham. Destined to be together, they are now reunited.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Jawa was a good friend and has left us with many fond memories. His passing was a shock to all – and to this day it is still hard to conceive.

Saratha and Jawa: We know both of you will be looking down on Dharshan and Dharshi, and we are certain they will continue to make you proud throughout their lives. We will always be here to help them through any challenges that life may bring.

You will be missed dearly, but never forgotten.

**Shanmugam Ramachandran & family** (UK)

---

## A Dear Friend

Ratnam Jawaharatnam was a popular and valuable student from Jaffna College Vaddukoddai, and his passing has shocked many of us who cherished his company in our younger years. He was a very talented individual, and achieved a great deal in his academic studies. He also excelled at sports, and contributed greatly in Academy Forum debates and annual dinners too. His sociable personality made it easy for him to make friends with many people during his time as a student, and he currently has friends from all corners of the world.

Jawa was one of the main organisers of the last Academy event held in 1970, and we were all reminded of those memories last November with a photo of our batch. He was very pleased to see the photo, as he had lost his own copy due to the troubles back home. He was eager to collect more photos of him and his classmates together, and asked some of us to send him anything we could find. Jawa tried his best to keep in contact with us all, and some of us were lucky enough to meet him in person within the past year after many years apart.

He would regularly talk about his late wife, Saratha, and his children Dharshan and Dharshi. It was clear he loved his family greatly, and we hope that God provides enough strength to Dharshan and Dharshi during this difficult time.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Jawa leaves us with numerous pleasant memories of our time with him. We'll miss his sense of humour and kind heart. We pray for his soul to rest in peace.

**Jaffna College Friends**
Anton (UK), Jeyapalan (Australia), Moorthy (Canada), Nirmala (UK), Savithiry (UK), Selvadurai (UK), Sivam (New Zealand)

---

## Ratnam Jawaharatnam

Anushiya Vijayakumar, one of our friends from Cey-Nor phoned me from London and said that she had some sad news. I knew it was going to be bad but never for a moment thought it would be about the passing away of Jawaharatnam. It was such unexpected news and one that saddened us and many of Jawa's friends down under.

When Saratha passed away, Jawa and I had many conversations, and I gently suggested to Jawa that since Saratha was no more Jawa had to be strong and take full responsibility to see the children's well being. Jawa readily agreed with me. Now to know that Jawa is also no more is really heart-breaking.

I met Jawa in 1976 when he applied for a position in the Finance Division of Cey-Nor, Karainagar. He was a very soft spoken person but came across as a confident and capable young man. He was also a cricketer and had a bundle of athletic certificates that easily helped him to secure the position he applied for.

It was a good decision to hire him and one that was also good for Jawa as he never looked back. He became one of the works accountants within two years and stayed with Cey-Nor until he left



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

for the UK after the communal violence that engulfed Sri Lanka in August 1983.

It didn't take long for us to recognise his many good qualities and the sincere and friendly disposition of both Saratha and Jawa made them my life-long friends. We continued to be in touch over the years although we were living thousands of miles apart, even before the advent of technologies such as Internet and Skype etc. I was very fortunate to meet them again in 1995 and stayed with them. Saratha and Jawa promised to visit Australia once the children are settled and we were looking forward to the visit. Unfortunately it will never be.

The most notable qualities of Jawa were his sincerity and his ability to create a lasting impression of friendship and closeness. He was a person who could be trusted and his friendship was one to be cherished forever.

Words cannot express our sadness, especially of losing both of them within a year. We can only pray to God to give Dharshi and Dharshan the courage and strength to bear this loss. Saratha and Jawa have brought up two wonderful children and they will fulfil all the dreams of their parents. It is great consolation that Saratha and Jawa have many friends and relatives in London who will help and look after Dharshi and Dharshan.

So with a heavy heart we have to accept that Jawa is no more with us. We will meet both of them once again in a better place.

**Muthuswamy Satasivam (Australia)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Jawa anna, we are missing you…

For the past 24 years, the friendship between us and Jawa anna has been inseparable. We had an extremely strong friendship, but Jawa anna is not here with us today and we miss him very much.
For us, Jawa was like a brother. He was also like an uncle to our children and overall was a gentleman who would give great guidance. On any occasion, we felt that he was the main organiser. Without him, it was very difficult for us to organise any event.

We are not very talkative people, but whenever Jawa anna was present, we would chat for a very long time. Jawa anna was a person who expressed kindness not only through his words but through his actions too. He always wanted to do everything meticulously and persevered until he achieved perfection. He was a very helpful man, who would immediately help us at any time.

Jawa anna and his family were happy and were always together on any occasion. As a family, we have been on a lot of trips, which have always been enjoyable.

Now Jawa anna and Saratha acca are reunited in heaven. They will always give their blessings and guidance to the children, no matter where they are. At the same time, we will always be in contact with Jawa anna's children – Dharshan and Dharshi – and will give them our full support throughout their lives.

"May his soul rest in peace…"

Loving Friends,
**Vetha and Komala** (UK)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Our Great Teacher, Jawa maama...

When we were very young, we knew Jawa maama and his family. He was a very good friend to our appa and also, he was our favourite maama. Every Christmas and birthday, his family would come to our house and they would give us fantastic presents. He also trained us for the 11+ and mathematics before he passed away. He was a brilliant teacher who gave good advice and tips. He was very kind and would never hurt anyone when he was teaching. Thank you very much Jawa maama. We miss you so much!

Loving students,
**Gokulan and Venugha** (UK)

---

## A Tribute to Mr. Ratnam Jawaharatnam - RIP

Mr. Jawaharatnam, affectionately known as "Jawa " to his Colleagues at Chartered Accountants, Ward Divecha Limited joined the firm as a Accounts Senior in February 2005; following the departure of the then Office Manager a few months later, Jawa was appointed Office Manager, a position he held until the time of his tragic and untimely death on 16 December 2012. It should be noted that Jawa had been employed by Ward Divecha Limited in the early 80s for about 8 years, leaving to take up a more lucrative and challenging position as the in-house Accountant to Mauritz, a firm which specialised in the textile trade.

Jawa was a quiet, courteous and friendly person always with a ready and easy smile for everyone who came into contact with him. He went about his duties in a professional and unruffled manner, and when the need arose would come into the office on weekends in order to meet deadlines. He got on well with all members of the staff and would often recount amusing anecdotes to their merriment. He also got on well with clients and to those he associated with intimately, his sudden and unexpected death has come as a very bad shock and a severe blow.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

On the personal side Jawa was a devoted Husband and a proud and loving Father to his twin children. His devotion to, and concern for, his ailing wife during her long period of ill health (which approximately spanned four years), was commendable. Her untimely death on 25 December 2011 must have affected him deeply and left a deep void, although he never allowed this to affect his professional duties. He was very proud of his two children and their academic performance in both the GCSE and "A" Levels and would often provide updates on their progress in their dental studies. The simultaneous graduation of his children as qualified Dentists was a source of great pride and comfort to Jawa, especially in the immediate aftermath of the loss of his wife, Saratha.


References to his extended family and the apparent bonds that existed between siblings provided glimpses of Jawa as playing a pivotal role in all family occasions and gatherings. He was instrumental in providing assistance - material, emotional and financial – to his Sister & brother-in-law in their re-location from Germany to England. Over the years, Jawa had provided help and assistance to people who came to him.

Jawa was first and fore-most a family man who took delight in his family, relatives and friends. His warm and friendly nature brought out the best in others. He will be greatly missed by those most close and dear to him. His Colleagues will undoubtedly miss his unassuming manner and his warm, friendly and helpful disposition.

May he Rest In Peace.
With sincere and heartfelt condolences from all the
**staff at Ward Divecha Limited**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனிதன் மனிதனாக வாழ 16 விடயங்கள்**

மிகவும் மதிக்கப்பட வேண்டியவர்கள் - தாய், தந்தை

| | |
|---|---|
| மிக மிக நல்ல நாள் | - இன்று |
| மிக பெரிய வெகுமதி | - மன்னிப்பு |
| மிகவும் வேண்டியது | - பணிவு |
| மிகவும் வேண்டாதது | - வெறுப்பு |
| மிகப்பெரிய தேவை | - நம்பிக்கை |
| மிகக் கொடிய நோய் | - பேராசை |
| மிகவும் சுலபமானது | - குற்றம் காணல் |
| கீழத்தரமான விடயம் | - பொறாமை |
| நம்பக்கூடாதது | - வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | - அதிக பேச்சு |
| செய்யக் கூடாதது | - நம்பிக்கைதுரோகம் |
| விலக்க வேண்டியது | - சோம்பேறித்தனம் |
| உயர்வுக்கு வழி | - உழைப்பு |
| நழுவவிடக் கூடாதது | - நட்பு |
| மறக்கக் கூடாதது | - நன்றி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை

வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம்
அதை நழுவ விடாதீர்கள்!
வாழ்க்கை ஒரு பயணம்
அதை சென்று முடியுங்கள்!
வாழ்க்கை ஒரு விடுகதை
அதை விடுவியுங்கள்!
வாழ்க்கை ஒரு விளையாட்டு
அதில் ஈடுபடுங்கள்!
வாழ்க்கை ஒரு போராட்டம்
அதை வென்று காட்டுங்கள்!
வாழ்க்கை ஒரு வெகுமதி
அதை ஏற்றுக்கொள்ளுங்கள்!
வாழ்க்கை ஒரு போட்டி
அதில் வெற்றி பெறுங்கள்!
வாழ்க்கை ஒரு கலை
அதை அழகுபடுத்துங்கள்!
வாழ்க்கை ஒரு வேதனை
அதை தாங்கிக் கொள்ளுங்கள்!
வாழ்க்கை ஒரு சவால்
அதை எதிர் நோக்குங்கள்!
வாழ்க்கை ஒரு சோகம்
அதற்கு மனம் தளராதீர்கள்!
வாழ்க்கை ஒரு பிரச்சனை
அதற்கு தீர்வு காணுங்கள்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*****

***"Our ever Loving Dad"***

*****



**"என்றும் எம் உளம் கவர்ந்த தந்தை"**

**அன்புப் பிள்ளைகள்**

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட
ஆருயிரின் இழப்பின்போது பல்வேறு வகைகளில்
எம்முடன் நின்று உதவிகள் புரிந்த உற்றார், உறவினர்கள்,
நண்பர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்தும்
தம் அனுதாபச் செய்திகளை நேரிலும்,
தொலைபேசி மூலமும் தெரிவித்தவர்களுக்கும்,
ஆறுதல் கூறிய அனைவருக்கும் அந்தியேட்டிக் கிரியை
நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டவர்களுக்கும்
ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டிய அனைத்து
உள்ளங்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத்
தெரிவித்துக்கொள்கிறோம்.

**மகள் தர்ஷி,**
**மகன் தர்ஷன்.**

*****

## Thank you

**We thank you everyone for being with us and comforting us during this difficult time.
We will always remember your words of sympathy, prayers and thoughts.**

**Dharshi (Daughter)**
**Dharshan (Son)**

**31 Babbacombe Gardens**
**Redbridge, Ilford**
**Essex IG4 5LZ**
**UK**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org